1994 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஏற்கனவே இரண்டு அரசு விதைப்பண்ணைகள் சேலம் மாவட்டத்தில் இயங்கி வருவதால், மேலும் அரசு விதைப் பண்ணை அமைக்க அரசு முன்வராது.

(ஆ) வினா எழவில்லை.

297–

வலங்கைமான் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடை அமைத்தல்.

***21249-- திருமதி கே. பஞ்சவர்ணம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வலங்கைமான் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

298–

விழுப்புரம் வட்டத்தில் மயானப் பாதை ஆக்கிரமிப்பை அகற்றுதல்.

***21237--திரு. வீ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) விழுப்புரம் வட்டம், சின்ன அம்மனங்குப்பம் ஆதிதிராவிடர் காலனிக்கு மயானப் பாதை புதிதாக எடுக்கப்பட்டும், தனி நபர் ஆக்கிரமிப்பு அகற்றப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அகற்றப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டம், விழுப்புரம் வட்டம், சின்ன அம்மனங்குப்பம் ஆதிதிராவிடர் காலனிக்கான மயானப் பாதையில் தனிநபர் ஆக்கிரமிப்பு செய்திருந்தது, தற்போது அகற்றப்பட்டுவிட்டது.

[*1994 ஏப்ரல் 18*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளி வைக்கப்பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை--

பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இந்தக் கூட்டத் தொடர் முடிகின்றவரையில் பேரவைக்கு வரக்கூடாது என்று தாங்கள் பணித்திருக்கிறீர்கள். இந்தக் கூட்டத் தொடர் - பட்ஜெட் கூட்டத் தொடர் - நீண்ட கூட்டத் தொடர் என்பதை நாங்கள் எல்லோரும் அறிவோம். உறுப்பினர்கள் அத்தனைபேரும் சபைக்கு வந்து கடமை ஆற்றுகின்ற அந்த நிலைமை நிலவ வேண்டும், உரிமை இருக்க வேண்டும். எனவே, தாங்கள் ஏற்கெனவே பிறப்பித்திருக்கிற ஆணையை, உத்தரவை மறுபரிசீலனை செய்து மீண்டும் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், சபைக் கூட்டத்திலே கலந்து கொள்வதற்கு நீங்கள் அனுமதியளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே இந்த உறுப்பினர் அவையின் விதிமுறைகளுக்கு மாறாக நடந்துகொண்டு இதேபோன்ற தண்டனை வழங்கப்பட்டவர் ஆவார். இதேபோன்று பல்வேறு சந்தர்ப்பங்களில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், ஏனைய கட்சித் தலைவர்களும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, சிலபல நேரங்களில் என்னுடைய முடிவைக்கூட மாற்றி, அவர் திரும்ப வரலாம் என்று அறிவித்தும் இருக்கிறேன். சில நேரங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பெருந்தன்மையாக இதை எடுத்துக்கொண்டு, விட்டுவிடலாம் என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க என்னுடைய உத்தரவை மறுபரிசீலனை செய்திருக்கிறேன். அவ்வாறு, ஏற்கெனவே பலமுறை நடந்துகொண்ட ஓர் உறுப்பினர், தொடர்ந்து இதே முறையிலே